திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர் : திருமதி.மு.ராணி.,

ந.க.எண் : 6797/2023/ஊ.வ.1 நாள் : .01.2024

ஊராட்சி ஒன்றியம் 11 JAN 2024 கொடைக்கானல்.

பொருள் : நேரடி நியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - திண்டுக்கல் மாவட்டம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV - (தேர்வு நாள்: 24.07.2022- இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட தேர்வாளர்களுக்கு பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது - பணிவரன்முறை செய்தல்.

பார்வை :
1) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை. கடித எண்:1845/PSD-D1/2023, நாள்: 25.08.2023.
2) திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6797/2023/ஊ.வ.1 நாள்.29.09.2023.

2445/2023 0101 12.1.2024

**********

ஆணை:

பார்வையில் காணும் கடிதத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய இளநிலை உதவியாளர் பதவிகளுக்கான தொகுதி IV (தேர்வு நாள்: 24.07.2022), போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற்று, திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 11 தேர்வர்களுக்கு பார்வை 2-ல் காணும் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளர்களாக பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது.

பணிநியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள் பின்வரும் விவரப்படி இம்மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் இளநிலை உதவியாளர்களாக பணியேற்பு செய்துள்ளனர்.

| வ. எண் | பெயர்/பதவி/ அலுவலகம் (திருவாளர்கள்) | இளநிலை உதவியாளராக பணியேற்ற நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | பி.செல்லபாண்டி,<br>இளநிலை உதவியாளர்,<br>ஊராட்சி ஒன்றியம், கொடைக்கானல். | 30.09.2023 மு.ப | 30.09.2023 மு.ப |
| 2 | கே.காளீஸ்வரி,<br>ஊர் நல அலுவலர் நிலை-II,<br>ஊராட்சி ஒன்றியம், ஒட்டன்சத்திரம். | 30.09.2023 மு.ப | 30.09.2023 மு.ப |
| 3 | கே.நிலாவதி,<br>இளநிலை உதவியாளர்,<br>ஊராட்சி ஒன்றியம், திண்டுக்கல். | 30.09.2023 மு.ப | 30.09.2023 மு.ப |
| 4 | கே.துக்கைராஜ்,<br>ஊர் நல அலுவலர் நிலை II,<br>ஊராட்சி ஒன்றியம், தொப்பம்பட்டி. | 30.09.2023 மு.ப | 30.09.2023 மு.ப |

Scanned with OKEN Scanner

| | | | |
|---|---|---|---|
| 5 | எம்.அஜித்,<br>இளநிலை உதவியாளர்,<br>உதவி செயற்பொறியாளர் அலுவலகம்,<br>திண்டுக்கல் உபகோட்டம். | 30.09.2023 மு.ப | 30.09.2023 மு.ப |
| 6 | ஜே.பிரிஸில்லா,<br>இளநிலை உதவியாளர்,<br>ஊராட்சி ஒன்றியம், ரெட்டியார்சத்திரம். | 30.09.2023 மு.ப | 30.09.2023 மு.ப |
| 7 | எம்.தீபா,<br>இளநிலை உதவியாளர்,<br>ஊராட்சி ஒன்றியம்,<br>நத்தம். | 30.09.2023 மு.ப | 30.09.2023 மு.ப |
| 8 | பி.முருகபிரபு,<br>இளநிலை உதவியாளர்,<br>ஊராட்சி ஒன்றியம்,<br>பழனி. | 30.09.2023 மு.ப | 30.09.2023 மு.ப |

மேற்காணும் இளநிலை உதவியாளர்களுக்கு கலம் எண் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இளநிலை உதவியாளர்களாக பணியேற்ற நாள் முதல் பார்வை 1 இல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி இப்பணிநியமன தேர்வர்களின் பணிவரன்முறையானது ஒருங்கினைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி IV தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளின் இறுதி தீர்ப்பிற்கு உட்பட்டது.

தனியர்களின் பணிவரன்முறை செய்யப்பட்ட ஆணையின் விவரத்தினை பணிப்பதிவேட்டில் பதிவு செய்வதுடன் மேலே கண்டுள்ள நிபந்தனைகளையும் சேர்த்து பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டுமென சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

03/01/24

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி),
திண்டுக்கல்.

பெறுநர் :-

தொடர்புடையவர் (உரிய வழிமுறையாக)

நகல் :- 1. வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ), திண்டுக்கல், கொடைக்கானல், ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, ரெட்டியார்சத்திரம், நத்தம் மற்றும் பழனி
2. ஊ.வ.6
3. ஊ.வ.1 - இருப்பு கோப்பிற்கு.

Scanned with OKEN Scanner